**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.2/2021**

**2026 ஆம்** வருடம் மார்ச் மாதம் 06 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.2-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆலிஸ் இருதயமேரி | ஜாதி | : | |
| க.பெ | : | சம்மனசு | தொழில் | : | சத்துணவு அமைப்பாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 67/2026 |
| தேதி | : | 06.03.2026 | | | |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் சின்னம்மா ஜெர்மன் வழக்கு தாக்கல் செய்துள்ளது உங்கள் தாத்தா இருதயத்தின் சொத்திற்கு பாகம் கேட்டு தான் என்றால் சரிதான். மொத்தம் எவ்வளவு சொத்து என்றால் 3 1/2 ஏக்கர் ஆகும். அதில் ரோட்டிற்கு தெற்கு மற்றும் வடக்கில் எவ்வளவு என்றால் ரோட்டிற்கு தெற்கு பக்கம் 1 ஏக்கர் 80 செண்டு, வடக்கு பக்கம் 1 ஏக்கர் 70 செண்டு ஆகும். வடக்கு பக்கம் உள்ள 1 ஏக்கர் 70 செண்டில் தான் இருதயத்தின் பூர்வீக வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு பூர்வீக வீட்டிகளிலும் இருதயத்தின் இரண்டு மகன்களான அந்தோணி மற்றும் மரியசூசை ஆகியோர் ஆளுக்கொரு வீட்டில் வசித்து வந்தனர் என்றால் சரிதான். அந்த பூர்வீக வீடுகளுக்கு பின்புறம் பொது கிணறு உள்ளது என்றால் சரிதான். பூர்வீக வீடுகள் இரண்டு மற்றும் கிணறு , அதைச்சுற்றியுள்ள இடங்கள் எவ்வளவு என்றால் 20 செண்டு இருக்கும். மீதமுள்ள 1 ஏக்கர் 50 செண்டை யார், யார் அனுபவித்தார்கள் என்றால் என் அம்மா மரியபுஷ்பம், எனது சின்னம்மா ஜெர்மன் ஆகியோர் அனுபவித்து வந்தார்கள். நீங்கள் கட்டியுள்ள வீடு அந்தோணி வீட்டிற்கு எந்த புறத்தில் உள்ளது என்றால் மேற்கு புறத்தில் உள்ளது.

ரோட்டிற்கு தெற்கு புறத்தில் யார், யார் அனுபவித்து வந்தார்கள் என்றால் பெரிய மாமா அந்தோணி, பெரியம்மா சந்தியாகுஅம்மாள், சின்ன மாமா மரியசூசை ஆகியோர் அனுபவித்து வந்தனர். மேற்படி சொத்துக்களை நீங்கள் பிரித்து அத்துமால் செய்து அனுபவித்தீர்களா அல்லது தோராயமாக அனுபவித்தீர்களா என்றால் தோராயமாக தான் அனுபவித்தோம். அந்தோணி குடியிருந்த வீட்டில் அந்தோணி மகன்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். மரியசூசை குடியிருந்த வீட்டில் மரியசூசை மகன் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். உங்கள் தாய்மாமன் அந்தோணி மகன் சம்மனசை திருமணம் செய்துகொண்டீர்கள் என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor